www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Eco

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

-----

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | பொருளியல் | மொத்த மதிப்பெண்கள்: 90

பிரிவு - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) எந்த பொருளாதார அமைப்பில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?
அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) சமத்துவ அமைப்பு
இ) உலகமய அமைப்பு ஈ) கலப்பு பொருளாதாரம் அமைப்பு

2) ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ............... ஆகும்.
அ) உற்பத்தி ஆ) இருப்பு இ) மாறிலி ஈ) ஓட்டம்

3) மொத்த மதிப்பில் இருந்து ..............ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்.
அ) வருமானம் ஆ) தேய்மானம்
இ) செலவு ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு

4) வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது
அ) குறைந்த செல் விளைவு விதி ஆ) தேவை விதி
இ) அங்காடி விதி ஈ) நுகர்வு விதி

5) கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது
அ) விளைவு அளிப்பு பற்றாக்குறை ஆ) விளைவு தேவை பற்றாக்குறை
இ) இரண்டும் பற்றாக்குறை ஈ) எவையும் இல்லை

6) கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10+0.8Y ஆக இருந்து செலவிட கூடிய வருவாய் 100 ஆக இருந்தால் இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?
அ) 0.8 ஆ) 800 இ) 810 ஈ) 0.81

7) சேமிப்பு உயர்ந்தால், நுகர்வு
அ) குறையும் ஆ) மாறாது இ) ஏறி இறங்கும் ஈ) உயரும்

8) ஃபிஷரின் பண அளவு கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
அ) மதிப்பளவு ஆ) மதிப்பின் நிலைக்கலன்
இ) பரிவர்த்தனை கருவி ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

9) பணவியல் கொள்கையை வடிவமைப்பது
அ) கூட்டுறவு வங்கிகள் ஆ) வணிக வங்கிகள்
இ) மைய வங்கி ஈ) வெளிநாட்டு வங்கி

10) வங்கி விகிதம் என்பது
அ) முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது
ஆ) வட்டி விகிதம் இ) அந்நிய செலாவணி ஈ) வளர்ச்சி விகிதம்

11) புதிய பன்னாட்டு வாணிக கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
அ) முழுமைச் செலவு ஆ) ஒப்புமை செலவு
இ) உற்பத்தி காரணி கோட்பாடு ஈ) எதுவும் இல்லை

12) பிரிக் என்ற சுருக்கச் சொல் சேர்க்கப்பட்ட ஆண்டு
அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010

13) காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் முதலானவை உடன் தொடர்புடையவை
அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ் ஈ) NAMA

14) பற்றாகுறை நிதி ஆக்கத்தின் அடிப்படை நோக்கமாவது
அ) பொருளாதார முன்னேற்றம் ஆ) பொருளாதார நிலை தன்மை
இ) பொருளாதார சமத்துவம் ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

15) பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்?
அ) பூமியின் ஈர்ப்பு விசை ஆ) ஆக்சிஜன்
இ) மையநோக்கு விசை ஈ) வெப்பநிலை அதிகமாதல்

16) அமில மழை ............... விளைவுகளில் ஒன்று.
அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒலி மாசு

17) முன்னோக்கு திட்டத்தின் மற்றொரு பெயர் ...............
அ) குறுகிய காலத் திட்டமிடல் ஆ) நடுத்தர காலத் திட்டமிடல்
இ) நீண்ட காலத் திட்டமிடல் ஈ) இவை ஒன்றும் இல்லை

18) இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ...............
அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ) 1948

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



19) $Y = \beta 0+\beta 1X1$ என்ற ஒட்டுறவு சமன்பாட்டில் Y என்பது ..............

அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி

இ) தொடர்ச்சி மாறி ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை

20) பொருளாதார அளவை இயல் என்பது எதன் இணைப்பு?

அ) பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆ) பொருளியல் மற்றும் கணிதம்

இ) பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியியல் ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை

## பகுதி - II

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) முதலாளித்துவம் என்றால் என்ன?

22) தனிநபர் வருமானம் என்றால் என்ன?

23) முழு வேலைவாய்ப்பு வரையறு.

24) நெகிழி பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.

25) வணிக செலுத்து நிலை பற்றி நீவிர் அறிவது யாது?

26) ''பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்'' குறிப்பு வரைக.

27) நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?

28) பொருளாதார வளர்ச்சியில் இருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.

29) புள்ளி விவர வகைகள் யாவை?

30) கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10+0.8Y ஆக இருந்து செலவிடக் கூடிய வருவாய் 100 ஆக இருந்தால் சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?

## பகுதி - III

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.

32) தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக் கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

33) தொகு அளிப்பின் வரைபடம் மூலம் விளக்குக.

34) தேவை இலுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.

35) நபார்ட்டின் பணிகள் யாவை?

36) தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.

37) காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்த உன் கருத்தை கூறுக.

38) பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?

39) பொருளாதார மாதிரி இருந்து பொருளாதார அளவை இயல் மாதிரி வேறுபடுத்துக.

40) வணிகம் தொடர்புடைய முதலீட்டு வழிமுறைகள் (TRIMS) குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்: 7×5=35**

41) அ) நான்கு துறை பொருளாதாரத்தில் வருமான வட்ட ஓட்டத்தினை வரைபடத்துடன் விளக்குக. **(அல்லது)**

ஆ) திட்டமிடலின் ஏதேனும் ஐந்து வகைகளை விவரிக்க.

42) அ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள ஏதேனும் ஐந்து சிரமங்களை விளக்குக. **(அல்லது)**

ஆ) மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?

43) அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. **(அல்லது)**

ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

44) அ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி. **(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவு கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தேவை** | **X** | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| **விற்பனை** | **Y** | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 31 |

45) அ) இர்விங்ஃபிஷரின் பண அளவு கோட்பாட்டினை விளக்குக. **(அல்லது)**

ஆ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

46) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க. **(அல்லது)**

ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

47) அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. **(அல்லது)**

ஆ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com